**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 55 of 2023

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : பெருமாள்

Father's Name :செல்லான்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of November** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை காங்கேயம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரீசியன் வேலை பார்த்து வருகிறேன். ரங்கன் அவர்களை சம்பவத்திற்கு முன்பாக எனக்கு தெரியாது. சம்பவத்தின் பொழுது தான் தெரியும். கடந்த 01.02.2023 ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணி அளவில் காங்கேயன்பாளையம் மெடிக்கல் கடை அருகே நானும் மோகன் என்பவரும் நின்று கொண்டிருந்த பொழுது ரங்கன் தெற்கிலிருந்து வடக்காக கை காட்டிக்கொண்டு ரோட்டை நடந்து கடந்த பொழுது கிழக்கிலிருந்து மேற்காக வந்த அதிவேகமாக கை காண்பித்து ரோட்டை கடந்தபோது கேஸ் வண்டி அதிவேகமாக வந்து ரங்கன் மீது மோதி விட்டது.

2. விபத்தை பார்த்த நான் போய் பார்த்த பொழுது அவருக்கு தலையில் அடிபட்டிருந்தது. அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி சூலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக தெரிவித்ததாக

தெரிந்து கொண்டேன். லாரியின் பதிவு எண் 7797 ஆகும். விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. பின்னர் விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் காங்கேயம்பாளையம், மதுரை வீரன் கோவில் வீதியில் பிறந்த முதல் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வீட்டின் கதவு எண்.3/127 என்றால் சரிதான். எங்கள் வீட்டில் அருகில் குடியிருந்து வருபவர்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வீரம்மாள் அவர்களை எனக்கு தெரியுமா என்றால் பார்த்து உள்ளேன். அவர்களிடம் வீடு எங்கு உள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கு மூன்று தெரு தள்ளி உள்ளது. ரங்கன் அவர்களை சம்பவத்திற்கு முன்பாக நான் பார்த்தது கிடையாதா என்றால் பார்த்து உள்ளேன், எங்கள் பகுதியைச் சார்ந்தவர். விபத்து சம்பந்தமாக நான் யாருக்கும் தகவல் கொடுக்கவில்லை. சம்பவம் குறித்து நான் சந்திரன் அவர்களுக்கு தகவல் சொன்னதாக போலீஸ் பதிவு செய்திருந்தால் தவறு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயம் பழனி கோவிலுக்கு காவடி பக்தர்கள் கொண்டு சென்ற சமயம் என்றால் சரிதான்.

2. மேற்படி சம்பவம் ஏற்பட்டதாக சொல்லப்படும் பகுதி எனக்கு பரிச்சயமான பகுதி மற்றும் பொதுமக்களும் அதிக அளவில் சென்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் அருகே சம்பவத்தின் பொழுது சூர்யா பேக்கரி இருந்தது. பொது மக்கள் அதிக அளவில் சென்று கொண்டிருந்ததால் சத்தமாக இருந்தது என்றால் சரிதான். நான் வடக்கிலிருந்து தெற்காக பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கு பக்தர்கள் காவடி கொண்டு செல்வதால் யார் செல்கிறார்கள் என்பது சரியாக தெரியாது என்றால் சரியல்ல, எப்பொழுதும் செல்ல மாட்டார்கள் பகுதி பகுதியாக தான் செல்வார்கள். பேக்கரியில் நான் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன் என்றால் டீ சாப்பிட்டுவிட்டு தெற்கு பார்த்த நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் மோகன்ராஜ் இருந்தார். பொதுமக்களும் இருந்தார்கள். பேக்கரியில் ஓனர் மற்றும் பணியாளர்களும் இருந்தார்கள் என்றால் சரிதான்.

3. போலீசார் என்னை எங்கு எப்பொழுது விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையம் வரவழைத்து விசாரித்தார்கள். நான் போலீசார் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் தற்பொழுது முதல் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்த ரங்கன் எனது உறவினர் என்பதாலும் அவர் காப்பீடு பணம் பெற வேண்டும் என்பதால் பொய்யான வழக்கு கொடுத்ததற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T
Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.20 19:46:06 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**